இணையதள அறிவிக்கை

ந.க.எண் .1271 /2018/பி3 நாள் :27.03.2018

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு**

**விருதுநகர் மாவட்டம்**

**சிவகாசி வட்டாரம்**

**அறிவிக்கை (Notification)**

**கிராம ஊராட்சி செயலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்**

விருதுநகர் மாவட்ட ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கிய கீழ்க்கண்ட கிராம ஊராட்சிகளில் 28.02.2018 வரை ஏற்பட்டுள்ள ஊராட்சி செயலர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஊராட்சி செயலாளர் காலிப்பணியிடங்களின் விவரம்**

| வ. எண் | ஊராட்சி செயலாளர் பதவியிடம் காலியாக உள்ள ஊராட்சியின் பெயர் | இனசுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|---|
| 1. | காளையார்குறிச்சி | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர் மரபினர் | - |
| 2. | கிருஉஷ்ணபேரி | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) | பெண் |
| 3. | நடுவப்பட்டி | பொது | பெண் |
| 4. | நிறைமதி | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) | - |
| 5. | பெரியபொட்டல்பட்டி | பொது | - |
| 6, | புதுக்கோட்டை | தாழ்த்தப்பட்டோர் | - |

**தகுதிகள் :-**

1.காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட ஊராட்சிப் பகுதிக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்..

| இனம் | வயது (01.07.2018 அன்று) | கல்வித்தகுதி |
|---|---|---|
| பொதுப்பிரிவினர் | 18 வயது பூர்த்தி அடைந்தும் 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (மற்றும் சீர்மரபினர்)/ பிற்படுத்தப்பட்டோர் | 18 வயது பூர்த்தி அடைந்தும் 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் | |

அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசாணை நிலை எண்.72, (இ5) நாள்- 9.07.2013, அரசாணை நிலை எண்.44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை (T2) நாள்- 11.03.2015, மற்றும் அரசாணை நிலை எண்.73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்1) துறை நாள் - 19.04.2017, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி செயலாளர் அவர்களின் கடித எண்.MS1, நாள்- 02.01.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளை வழக்கு எண்.MP(MD) 2/2014 and 1/2015 in WP(MD) 12032/2014, MP(MD) 2/2013 and 1/2015 in WP(MD) 16884/2013 and WMP(MD) 1166/2016 and 3240/2016 in WP(MD) No 1393/2016 ன் பேரில் வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவிற்கு உட்பட்டு நிரப்பப்படும்.

**நிபந்தனைகள்**

1.விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

2, விண்ணப்பிக்கும் நாளில் 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்

3.இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4.ஒவ்வொரு கிராம ஊராட்சிப் பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரர் காலியிடம் அறிவிக்கப்பட்ட ஊராட்சிப் பகுதிக்குள் வசிக்க வேண்டும்.

6. தகுதியான விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட ஊராட்சியில் இல்லாவிட்டால் அவ்ஊராட்சியின் எல்லையை ஒட்டிய ஊராட்சியிலிருந்து விண்ணப்பிக்கும் தகுதி வாய்ந்த நபர்கள் பரிசீலனை செய்யப்படுவர்.

7. அரசு விதிகளின் படி இன சுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு 2017 திருத்திய ஊதியக் குழு விதிகள் கீழ் சிறப்பு கால முறை ஊதியம் அட்டவணை (Matrix Table Level-4) குறைந்தபட்சம் ரூ.7700/- மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகள் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியத்தின் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 12.04.2018 (வியாழக்கிழமை) அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) அனுப்பி வைக்கப்படும்

ஊராட்சி செயலாளர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும், தேசிய தொழில் நெறி வழிகாட்டு மைய இணையதள(National Career Service Portal) www.ncs.gov.in மற்றும் விருதுநகர் மாவட்ட இணையதள **www.virudhunagar.tn.nic.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)**
**சிவகாசி வட்டாரம்,**
**விருதுநகர் மாவட்டம்,**